ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீ குருங்கமுநயே நம:

நம்பி தளிமம்.

பரிசோதித்தது:- ஸ்ரீ. உ. வே. பெரியநம்பி வேங்கடாச்சாரியார் ஸ்வாமி
ஸ்ரீ. உ. வே. லெ. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி.

—: திருக்குறுங்குடி, திருஜீயர் மடம் வெளியீடு. :—
1138-ம்ளு சுபகிருது வருஷம் ஸ்ரீநம்பி ஸந்நிதி,
திருப்பங்குனி உத்ஸவத்தில்
வெளியிடப்பெற்றது.
1963.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீ குருங்கமுநயே நம:

முன்னுரை.

ஸ்ரீமல்லக்ஷ்மண யோகீந்த்ர ஸ்ரீபாதகமலாச்ரயம் |
ஸ்ரீகுருங்கமுநிம் வந்தே திவ்யக்ஞானப்ரதம் சுபம் ||

"நம்பி தளிமம்" என்ற இந்த ப்ரபந்தமானது ஸ்ரீவைஷ்ணவர்களுடைய திருமாளிகைகளில் நடைபெறுகிற விவாஹ காலங்களில், சீர்பாடலின்போது அனுசந்திக்கப்படுகிறது. "நம்பி திருவாய்மொழி" என்றும் இதனைக் கூறுவர். திருமணக்கோலத்தோடுள்ள தம்பதிகள் தேங்காய் உருட்டும்போது, அறியக் கற்று வாய்நல்லாரான ஸ்ரீவைஷ்ணவர்கள் கோஷ்டியாக எழுந்தருளியிருந்து, ஆண்டாள் அருளிச்செய்த "வாரணமாயிரம்" பதிகத்தை சேவிப்பர். அனந்தரம் இந்த "நம்பி தளிமம்" என்ற ப்ரபந்தத்தையும் சேவிப்பர். இவ்விரண்டையும் சேர்த்து அனுசந்திப்பது பெரும்பாலும் அனேக திவ்யதேசங்களில் காணப்படுகிறது.

"வாரணமாயிரம்" பதிகத்தில் ஆண்டாளாகிற பிராட்டி, விவாஹ மஹோத்ஸவ வைபவங்களைத் தான் கனவிலே கண்டு களித்த படியைக் கூறுகிருள். அடுத்த ப்ரபந்தமான "நம்பி தளிம"த்தில் நம் போல்வாரும் கண்ணாரக்கண்டு, கை தொழும்படியாக, நம்பி எம்பெருமான் உத்ஸவம் கொண்டருளுவது கூறப்படுகின்றது. அங்கே நங்கை கண்ட கனவை நனவாக்கியது தோற்ற, இங்கே நம்பி எம்பெருமான் பவனி வந்து, தன்னுடைய நடையழகு காட்டுகிருன். இங்ஙனம் நற்கனவை நனவாக்கியருளும் நம்பியின் திருவருளால், நம்முடைய லக்ஷ்யங்கள் எல்லாம் கைகூடுமாகையாலே, அவனது வைபவத்தைக் கூறி, "மனையறம் புகும் இந்த புது மணத் தம்பதிகளை அழகு செய்ய வாரீர்—தம்பதிகள் புகவிருக்கும் மனையறத்தை அழகு செய்விக்க வாரீர்" என்று கூடியிருக்கும் பெண்டிரைப் பிரார்த்திப்பதாகவே இப்பிரபந்தம் அமைந்தது போலும்! இதனை அருளிச்செய்தவர், எம்பெருமானுருக்கும் பெரிய திருமந்திரத்தை உபதேசித்தருளியவரான பெரியநம்பிகள் என்று சில சுவடிகளில் காண்கின்றதே யல்லாது வேறொன்றும் தெரியவில்லை. எங்ஙனமிருப்பினும் அருளிச் செயலோடொக்க அனுசந்திக்கும் பெருமை யொன்றே போதுமானது. அதுவே இந்நூலின் ஏற்றமெல்லாம் கூறும்.

இதில் "திருக்குறுங்குடி நம்பி" பாட்டுடைத்தலைவனுக அமைந்த அழகு நெஞ்சை நீர்ப்பண்டமாக்க வல்லது. எங்ஙனேயென்று சிறிது விமரிசிக்கவேணும். ஆண்டாள் "நாரண நம்பி", "மைத்துனன் நம்பி மதுசூதன்," "நாராயணன் நம்பி" என்று கனவிலே கண்ட எம்பெருமானைக் கூறுகிருள். பூர்ணனுனவனையே "நம்பி" என்கின்றது. 'நம்பியைத் தென்குறுங்குடி நின்ற" என்னும் பாசுரத்திலே "எம்பிரானை என் சொல்லி மறப்பனே" என்றும் "எங்ஙனேயோ" பதிகத்திலே, திருக்குறுங்குடி நம்பியுடைய வடிவழகும், கண்ணழகும், ஆயுதாபரண சோபையும் "கண்ணுள் நீங்கா, நெஞ்சுள்ளும் நீங்காவே" என்றும் ஆழ்வார் அருளிச்செய்கிருர். அங்ஙனமே மாறன் பணித்த தமிழ் மறைக்கு ஆறங்கம் கூற அவதரித்த மங்கையர் கோனும் "காமரு சீர்க் கலியன் கண்ணகத்தும் மனத்துமகலாக் கொற்றவன், முற்றுலகாளி நின்ற குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின்' என்று பிரார்த்திக்கிருர். இந்த திவ்ய தேசத்தில், எம்பெருமான் பூர்ணத்வத்தோடு எழுந்தருளி

யிருப்பதைக் கண்குளிரக் கண்டு தொழுதெழும் நமக்கு * ''வைஷ்ணவ வாமநத்தில் நிறைந்த நீல மேனியின் ருசிஜநக விபவ லாவண்யம் பூர்ணம்'' என்று, ஆழ்வார் திருவுள்ளத்தை உள்ளவாறே தெரிவிக்குமதாய் அவதரித்த ''ஆசார்ய ஹ்ருதய'' ஸ்ரீஸூக்தியும் கையிலங்கு கனியாகக் காட்டித்தரும். இங்ஙனம் தனது ஸௌந்தர்ய, ஸௌகுமார்ய, ஸௌசீல்ய குணங்களாலே, பராங்குச, பரகால, யதிவராதிகளையும் ஆட்கொண்டருளின ஸ்ரீவைஷ்ணவ நம்பி ''நம்பி தளிமத்தில்'' பாட்டுடைத் தலைவனாக அமைந்தது சாலவும் அழகியதே.

---

* வைஷ்ணவ வாமநத்தில்–திருக்குறுங்குடிக்கு ''வாமன க்ஷேத்ரம்'' என்றும் ''வாமன குடி'' என்றும் பெயர் (குறுகிய வாமந உருவத்தில் வந்து குடியிருக்கையாலே குறுங்குடி என்கின்றது). இத்தலத்துப் பதிகத்தில் ஆழ்வார் ''திருக்குறுங்குடியதன் மேல் அறியக்கற்றுவல்லார் வைட்டணவர் ஆழ்கடல் ஞாலத்துள்ளே'' என்றருளிச் செய்தமையாலும், இந்த திவ்ய தேசத்திற்கு ஸ்வாமி எம்பெருமானார் எழுந்தருளியபோது, நம்பி எம்பெருமான் அவர் பக்கலிலே மந்த்ரோபதேசம் பெற்று ''நாமும் நம் இராமானுசனையுடையோம்'' என்றருளிச்செய்து ''ஸ்ரீவைஷ்ணவ நம்பி'' என்ற தாஸ்ய நாமத்தைப் பெற்றதாலும் இந்த க்ஷேத்ரத்தை ''வைஷ்ணவ வாமநம்'' என்பர்.

கிடைத்த ஏட்டுப் பிரதிகளிலும் கையெழுத்துப் பிரதிகளிலும் உலக வழக்கிலும் ''தளிமண் படுக்க வாரீர்'' ''தளிமின் படுக்க வாரீர்'' ''தளுமம் படிக்க வாரீர்'' ''தழுவன் படிக்க வாரீர்'' ''தளுவம் படிக்க வாரீர்'' என்று பல்வேறு பாடங்களாயிருந்ததால் ஈற்றடிகளை நிர்ணயிக்க சிறிது சிரமம் தோன்றியது. ''களிமின் களிப்போமே'' என்ற பெரியோர்களின் பாடம் சீர்பாடலுக்குக் கொள்ளத்தக்கதேயானாலும், இந்த ப்ரபந்தத்தின் ஈற்றடிகள் முழுவதையுமே மாற்றக்கூடிய பாடமாகத் தோன்றுவதால் ''தளிமம் படுத்த வாரீர்'' என்ற பாடத்தையே கொள்கிறோம்.

தளிமம் – அழகு, படுத்தல் – செய்தல், செய்வித்தல்.

'' தளிமப் படுத்தவாரீர் '' என்பதே வழக்கிலிருந்து மேற்கண்டவாறு சிதைந்திருக்கலாம் என்று தோன்றுகிறது.

''தாம்தாம் செய்யுமஃதை வயிற்றிற் பிறந்தார் செய்தவாறே குற்றமாம் இத்தனையோ'' என்று தாய்மாரையும் கேட்கும்படியாக, ஆழ்வாரை, தன்னுடைய வடிவழகாலே நாவீறு கொள்ளச் செய்

தவன் நங்கள்கோலத் திருக்குறுங்குடி நம்பி. அவன் பக்கலிலே அடியோங்களுக்குண்டான வ்யாமோஹம் ஜந்மப்ராப்தமானது. இந்நூலைப் பதிப்பிக்க நேர்ந்ததும் அதனடியாக விளைந்ததாகையால், பிழை யேதுமிருப்பின் "என் நெஞ்சினால் நோக்கிக் காணீர்!" என்று பிரார்த்திக்கிறோம்.

இந்நூலைப் பதிப்பித்தற்கு அடியோங்களை பூர்ணமாக ஆசீர்வதித்தருளினவர்கள், கீர்த்தி மூர்த்திகளாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ திருக்குறுங்குடி மடாதிபதி 46-வது பட்டம் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ சடகோப ராமானுஜ ஜீயர் ஸ்வாமியும், 47-வது பட்டம் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ பட்டர்பிரான் ஜீயர் ஸ்வாமியுமே. கிருபாமாத்ர ப்ரசந்நாசார்யர்களிலே முதன்மையாக எழுந்தருளியுள்ள இந்த இரண்டு ஸ்வாமிகளின் திருவடிகட்கு "தலையல்லால் கைம்மாறிலோம்."

இறுதி விண்ணப்பம் ஒன்றுண்டு. மூதறியும் அம்மனைமாரும் கண்டபாடமாக்கி அனுசந்தித்து வந்த இந்த "நம்பி தனிமம்" சேவிப்பார் "ஒரொருவருண்டாகில் அத்தனை காண்" என்று அரிதாகிவருகிறது. உகந்தருளின திவ்ய தேசங்களில் எல்லாமே இப்பிரபந்தம் சேவிக்கும் முறைமையுமிருந்து, தற்போது அரிதாகியிருக்கக்கூடுமோ? என்ற ஐயமும் தோன்றுகிறது. ஆதலால் ஸ்ரீவைஷ்ணவப் பெரியோர்கள், இப்பிரபந்தானுசந்தானத்தை ப்ரபலமாக்கியருள வேணும் என்பதே அடியோங்களது ப்ரணய பூர்வகமான ப்ரார்த்தனை. இவ்வனுசந்தானம் நூதனமானதுமன்று. "எந்தை தந்தை தந்தை" என்றவாறு நம் முன்னோர்கள் தொடங்கி வழிவழியாக அனுசந்தித்து வருவதாதலின் கைவிடாதிருக்கவேண்டியது நம் கடமையே என்றும் விண்ணப்பித்து நிற்கிறோம். அருள் செய்ய வேண்டுவதே.

இங்ஙனம்

பெரியநம்பி ஸ்ரீநிவாஸ தாஸன்

பா. திருநாராயண தாஸன்.

ஸ்ரீ:

"திருக்குறுங்குடி அழகிய நம்பி" உத்ஸவம் கொண்டருளும் விஷயமான இந்நூல், அவன் உத்ஸவம் கொண்டருளும்போது, வளர்மீன விசாகத்தே வந்துதித்து, அஸ்மதாசார்யராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ திருக்குறுங்குடி மடாதிபதி 46-வது பட்டம் ஸ்ரீ. ஸ்ரீ, சடகோப ராமானுஜ ஜீயர் ஸ்வாமியின் திருவடி வாரத்தில், இந்த மீன விசாக திருநக்ஷத்திரத்தன்று சமர்ப்பிக்கப்பட்டு ஸ்ரீவைஷ்ணவ உலகிற்கு அளிக்கப்படுகிறது. இதுவுமோர் கிடைத்தற்கரிய பாக்கியமே!

ஸ்ரீ:


தன் திருந்து செம்பொற் கழலடிக்கீழ்
அருளியிருத்தும் அம்மான் !

★


" அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி
ஆயிரம் பல்லாண்டு "

★

திருக்குறுங்குடி திருஜீயர்மடம் மடாதிபதி
46-வது பட்டம் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி
ஸ்ரீ. ஸ்ரீ. சடகோப ராமானுஜ ஜீயர் ஸ்வாமி



ஸ்ரீ :



ஸ்ரீ மஹாபூர்ண குரவே நம ; ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

ஸ்ரீமதே குருங்கமுநயே நம ;

பொதுத் தனியன்கள்.

ஸ்ரீ சைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணர்ணவம் |
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம் ||

லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாத யாமுந மத்யமாம் |
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தே குருபரம்பராம் ||

யோ நித்ய மச்யுதபதாம்புஜயுக்மருக்ம
வ்யாமோஹதஸ்ததிதராணி த்ருணாயமேநே ।
அஸ்மத்குரோர் பகவதோஸ்ய தயைகஸிந்தோ:
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூதி:
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம் ।
ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத் ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா ॥

பூதம் ஸரச்ச மஹதாஹ்வய பட்டநாத
ஸ்ரீ பக்திஸார குலசேகர யோகிவாஹாந் ।
பக்தாங்க்ரிரேணு பரகால யதீந்த்ரமிச்ராந்
ஸ்ரீமத் பராங்குசமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம் ॥

ஸ்ரீ:

ஆண்டாள், எம்பெருமானார், ஜீயர் திருவடிகளே சரணம்.

ஆண்டாளருளிச்செய்த

நாச்சியார் திருமொழி

தனியன்கள்.

கோலச்சுரிசங்கை மாயன்செவ்வாயின் குணம் வினவும்
சீலத்தனள் * தென்திருமல்லிநாடி * செழுங்குழல்மேல்
மாலைத்தொடை தென்னரங்கருக்கீயும் மதிப்புடைய
சோலைக்கிளி * அவள்தூய நற்பாதம் துணைநமக்கே.

அல்லிநாட்டாமரைமே லாரணங்கி னின்துணைவி *
மல்லிநாடாண்ட மடமயில் — மெல்லியலாள் *
ஆயர்குல வேந்த னாகத்தாள் * தென்புதுவை
வேயர் பயந்த விளக்கு.

ஆறுவது திருமொழி — வாரணமாயிரம்.

* * வாரணமாயிரம் சூழவலஞ்செய்து *
நாரணநம்பி நடக்கின்றானென்றெதிர் *
பூரணபொற்குடம் வைத்துப்புரமெங்கும் *
தோரணம்நாட்டக் கனாக்கண்டேன் தோழீநான். 1

தோழீ! நான்கண்ட கனாவெல்லாம் நற்கேளாய்!
☐ என்தோழீ! சொல்லாய் நீ கண்டகனாவெல்லாம்.

நாளைவதுவை மணமென்றுநாளிட்டு *
பாளைகமுகு பரிசுடைப்பந்தற்கீழ் *
கோளரிமாதவன் கோவிந்தனென்பானோர் *
காளைபுகுதக் கனாக்கண்டேன் தோழீநான். 2

தோழீ! நான்கண்ட கனாவெல்லாம் நற்கேளாய்!
என்தோழீ! சொல்லாய் நீ கண்டகனாவெல்லாம்.

இந்திரனுள்ளிட்ட தேவர்குழாமெல்லாம் *
வந்திருந்தென்னை மகள்பேசிமந்திரித்து *
மந்திரக்கோடியுடுத்தி மணமாலை *
அந்தரிசூட்டக் கனாக்கண்டேன் தோழீநான். 3

தோழீ! நான்கண்ட கனாவெல்லாம் நற்கேளாய்!
என்தோழீ! சொல்லாய் நீ கண்டகனாவெல்லாம்.

நால்திசைத்தீர்த்தங்கொணர்ந்து நனிநல்கி *
பார்ப்பனச்சிட்டர்கள் பல்லாரெடுத்தேத்தி *
பூப்புனைகண்ணிப் புனிதனோடென்றன்னை *
காப்புநாண்கட்டக் கனாக்கண்டேன் தோழீநான். 4

தோழீ! நான்கண்ட கனாவெல்லாம் நற்கேளாய்!
என்தோழீ! சொல்லாய் நீ கண்டகனாவெல்லாம்.

கதிரொளிதீபம் கலசமுடனேந்தி *
சதிரிளமங்கையர்தாம் வந்தெதிர்கொள்ள *
மதுரையார்மன்னன் அடிநிலைதொட்டெங்கும் *
அதிரப்புகுதக் கனாக்கண்டேன் தோழீநான். 5

தோழீ! நான்கண்ட கனாவெல்லாம் நற்கேளாய்!
என்தோழீ! சொல்லாய் நீ கண்டகனாவெல்லாம்.

மத்தளம்கொட்ட வரிசங்கம்நின்றூத *
முத்துடைத்தாமம் நிரைதாழ்ந்தபந்தற்கீழ் *
மைத்துனன்நம்பி மதுசூதன்வந்தென்னை *
கைத்தலம்பற்றக் கனாக்கண்டேன்தோழீநான். 6

தோழீ! நான்கண்ட கனாவெல்லாம் நற்கேளாய்!
என்தோழீ! சொல்லாய் நீ கண்டகனாவெல்லாம்.

வாய்நல்லார் நல்லமறையோதிமந்திரத்தால் *
பாசிலைநாணல்படுத்துப் பரிதிவைத்து *
காய்சினமாகளிறன்னான் என்கைப்பற்றி *
தீவலம்செய்யக் கனாக்கண்டேன்தோழீநான். 7

தோழீ! நான்கண்ட கனாவெல்லாம் நற்கேளாய்!
என்தோழீ! சொல்லாய் நீ கண்டகனாவெல்லாம்.

இம்மைக்கும் ஏழேழ்பிறவிக்கும்பற்றாவான் *
நம்மையுடையவன் நாராயணன்நம்பி *
செம்மையுடைய திருக்கையால்தாள்பற்றி *
அம்மிமிதிக்கக் கனாக்கண்டேன்தோழீநான். 8

தோழீ! நான்கண்ட கனாவெல்லாம் நற்கேளாய்!
என்தோழீ! சொல்லாய் நீ கண்டகனாவெல்லாம்.

வரிசிலைவாள்முகத்து என்னைமார் தாம்வந்திட்டு *
எரிமுகம்பாரித்து என்னைமுன்னேநிறுத்தி *
அரிமுகனச்சுதன் கைம்மேலென் கைவைத்து *
பொரிமுகந்தட்டக் கனாக்கண்டேன்தோழீநான் * 9

தோழீ! நான்கண்ட கனாவெல்லாம் நற்கேளாய்!
என்தோழீ! சொல்லாய் நீ கண்டகனாவெல்லாம்.

குங்குமமப்பிக் குளிர்சாந்தம்மட்டித்து *
மங்கலவீதி வலம்செய்துமணநீர் *
அங்கவனோடும் உடன்சென்றங்கானைமேல் *
மஞ்சனமாட்டக் கனாக்கண்டேன்தோழீநான், 10

தோழீ! நான்கண்ட கனாவெல்லாம் நற்கேளாய்!
என்தோழீ! சொல்லாய் நீ கண்டகனாவெல்லாம்.

* * ஆயனுக்காகத் தான்கண்டகனாவினை *
வேயர்புகழ் வில்லிபுத்தூர்க்கோன்கோதைசொல் *
தூயதமிழ்மாலை யீரைந்தும்வல்லவர் *
வாயுநன்மக்களைப்பெற்று மகிழ்வரே. 11

தோழீ! நான்கண்ட கனாவெல்லாம் நற்கேளாய்!
என்தோழீ! சொல்லாய் நீ கண்டகனாவெல்லாம்.

அடிவரவு:- வாரணம் நாளை இந்திரன் நாற்றிசை கதிர் மத்தளம் வாயிம்மை வரிசிலை குங்குமம் ஆயன் கருப்பூரம்.

ஆண்டாள், எம்பெருமானார், ஜீயர் திருவடிகளே சரணம்;

□ "என் தோழீ! சொல்லாய் நீ ராக்கண்ட நற்கனா" என்றும் பாடம்.

* * இரண்டு தடவைகள் அனுசந்திக்கவேண்டியவை.

ஸ்ரீ:

நம்பி தளிமம்.

தனியன்.

கமலாபதி கல்யாண குணாம்ருத நிஷேவயா।
பூர்ணகாமாய ஸததம் பூர்ணாய மஹதே நம:॥

ஆரணத்தின் பொருளாகி நின்ற
அழகியநம்பி முதல்திருநாள்
பூரணபொற்குட மெல்லையில்லாப்
பொன்னின் விளக்கொளியுட் கலந்து
தோரணவீதியெல்லாம் துலங்கத்
தோன்றும் பவனி தொழுதிறைஞ்சி
தாரணிவாழவே தையல்நல்லீர்!
சாற்றித்தளிமம் படுத்தவாரீர்!
தாமரையாள் மணவாளனென்றே
சாற்றித்தளிமம் படுத்தவாரீர்! 1

இரண்டு மருதிடைபோன நம்பி
இரண்டாந் திருநாளி லெம்மையாள
கரண்டமாடு பொய்கையின் பூமணமும்
கற்பகப் பூஞ்சோலைப் பரிமளமும்
திரண்டு பெருந்திருவீதி யெல்லாம்
சிறக்க வெழுந்தருளும் பவனிதன்னை
மருண்ட கருங்குழல் மாதுநல்லீர்!
வாழ்த்தித் தளிமம் படுத்தவாரீர்!
மானின் பின்போனவர்தானென்றே
வாழ்த்தித் தளிமம் படுத்தவாரீர்! 2

முத்திக்கு வித்தாகநின்ற நம்பி
மூன்றுந்திருநாளில் முனிவர்சூழ
மெத்தத் திருவடி மீதிலேறி
மன்றில் புயல்போல் விளங்கத்தோன்றி
சுத்த மரகதமாலை சாற்றி
தோன்றும் பவனி தொழுதிறைஞ்சி

பத்தியுடன் மடப்பாவை நல்லீர்!
பாடித்தளிமம் படுத்தவாரீர்!
§ பாஞ்சாலி கேசம் முடித்தானென்றே
பாடித் தளிமம் படுத்தவாரீர்! 3

நீலமேகம் போலழகுடனே நின்றவன்
நீண்ட பொன்மேனி நம்பி
சேலைத் திருப்பரிவட்டம் சாற்றி
$ திருவனந்தாழ்வான் மேல் தேவியோடும்
நாலாந் திருநாளில் வீற்றிருந்த
நல்ல திருக்கோலம் கண்டிறைஞ்சி
பாலாம் பனிமொழிப் பாவைநல்லீர்!
பாடித்தளிமம் படுத்தவாரீர்!
‖ பக்கம் நின்றார் பயம் தவிர்த்தானென்றே
பாடித்தளிமம் படுத்தவாரீர்! 4

§ "பாஞ்சாலி கூந்தல் முடித்தானென்றே" என்றும்,
$ "திருமுத்தின் பந்தற்கீழ் தேவரோடும்" எனவும்,
‖ "பாண்டவர்க்குத் தூது சென்றானென்றே" எனவும் பாடம்.

குன்றெடுத்தாநிரை காத்தநம்பி
குறுங்குடி வல்லியார் தம்முடனே
வென்றிக்கருடன் திருத்தோளிலேறி
விண்ணில்வளர் காளமேகம்போல்
தென்றல் வீசுமஞ்சாந் திருநாள்
சிறக்கவெழுந்தருளும் பவனிதன்னை
மன்றில் கருங்குழல் மாதுநல்லீர்!
மகிழ்ந்து தளிமம் படுத்தவாரீர்!
மாவலியைச்சிறை வைத்தானென்றே
மகிழ்ந்து தளிமம் படுத்தவாரீர்! 5

அல்லைப்பகலில் அழைக்கவல்லார்
அழகியநம்பி ஆறாந்திருநாள்
கல்லைப்பெண்ணாக்கிய * காரணத்தார்
கனகதண்டிகையி னுட்புகுந்து
செல்வப் பெருந்திரு வீதியெல்லாம்
சிறக்க வெழுந்தருளும் பவனிதன்னை

* "கார்வண்ணத்தார், காகுத்தனார்" என்றும் பாடம்.

முல்லைக்குறுநகை மாதுநல்லீர்!
மொழிந்து தளிமம் படுத்தவாரீர்!
√ முப்புரமெரித்தான் பக்கநின்றானென்றே
மொழிந்து தளிமம் படுத்தவாரீர்! 6

ஏழுலகும் போற்றவே நின்றநம்பி
ஏழாந்திருநாளி லெம்மையாள
வேழத்தின்மேல் கொண்டழகுடனே
விண்ணவர் பூமாரி மெய்கலந்து
சூழப்பெருஞ்சேனை வார்கடல்போல்
தோன்றும் பவனி தொழுதிறைஞ்சி
வாழும்படிநாம் மடந்தைநல்லீர்!
வாழ்த்தித் தளிமம் படுத்தவாரீர்!
|| வாமனனாய் மூவடி மண்ணிரந்தானென்றே
வாழ்த்தித் தளிமம் படுத்தவாரீர்! 7

√ ''மூவுலகும் போற்றப் பொலிந்தானென்றே'' எனவும்
|| ''வானோர்கள் போற்றப் பொலிந்தானென்றே'' என்றும் பாடம்.

எட்டெழுத்தின் பொருளாகி நின்றநம்பி
எட்டாந்திருநாளில் சிட்டர்கள்சூழ
கட்டிய தொப்பாரமும் பச்சைமேனிக்
கனகவரை நம்பிரான் மீதிலேறி
தொட்ட குசையுடன் வாகுவலயமும்
தோள்புறம் சாற்றிய பரிசையழகும்
வெட்டிவரும் திருவேட்டைக் கோலம்
* விளம்பித் தளிமம் படுத்தவாரீர்!
விண்ணவர்கள் போற்றப் பொலிந்தானென்றே
விளம்பித் தளிமம் படுத்தவாரீர்! 8

உம்பர்கள் போற்றவேநின்ற நம்பி
ஒன்பதாந்திருநாளில் ஊடல்தணிந்து
அம்புவிமாதுடன் பூ மடந்தையோடு
அழகுடன் சமனபூபாலனேறி

* ''விரும்பி'' என்றும் பாடம்.

செம்பொன் நெடுந்திருவீதி யெல்லாம்
சிறக்க வெழுந்தருளும் பவனிதன்னை
வம்பவிழ்குழல் மாதுநல்லீர்!
வாழ்த்தித் தளிமம் படுத்தவாரீர்!
வாலியை யொருகணையால் வதைத்தானென்றே
வாழ்த்தித் தளிமம் படுத்தவாரீர்! 9

நம்பி குறுங்குடி வாழவந்த
நாரணன் பத்தாந்திருநாள்
செம்பொன் மலைபோல் வரும்பெரிய
திருத்தேரில் தேவிமார் தம்முடனே
தும்புருநாரதர் தேவரோடும்
தோன்றும் பவனி தொழுதிறைஞ்சி
செம்பொனொளிவளை மாதுநல்லீர்!
செப்பித் தளிமம் படுத்தவாரீர்!
* செற்றவன் தென்னிலங்கை மலங்கவென்றே
செப்பித் தளிமம் படுத்தவாரீர்! 10

---

* "தென்னிலங்கை செற்றுனென்றே" எனவும் பாடம்.

பத்தர்க் கெளியனாய்நின்ற நம்பி
பதினோராந்திருநாள் பத்தர்க்கெல்லாம்
முத்திதரும் திருப்பாற்கடலில் நீராடி
முழுவயிரமான திருச்சிவிகையேறி
சத்தாவரணமும் கொண்டருளி
சகலோர்க்கு முத்தியுந்தந்தருள
முத்தாரவனமுலை மாது நல்லீர்!
மொழிந்து தளிமம் படுத்தவாரீர்!
* மூவுலகும் போற்றப் பொலிந்தானென்றே
மொழிந்து தளிமம் படுத்தவாரீர்! 11

---

* "முப்புரமெரித்தான் பக்கம் நின்றுனென்றே" என்றும் பாடம்.
"பத்தர்க்கெளியனாய் நின்றநம்பி பதினோராந்திருநாளில் பத்தரெல்லாம்
சித்தம் களிகூர்ந்து சேவிக்கவே திருப்பாற்கடலில் திருவாராடி
சட்டத்துத்தேவிமார் தம்முடனேவரும் சாத்தாவரணப் பவனிதன்னை
இட்டத்துடன்காம் மாதுநல்லீர்! இறைஞ்சித் தளிமம் படுத்தவாரீர்!
ஈரேழுலகும் அளந்தான் என்றே இறைஞ்சித் தளிமம் படுத்தவாரீர்!
—என்கிற பாடமும் காணப்படுகிறது.

காணவாரீர்! மாதர் காணவாரீர்!
கையும் சுருளுமாய்க் காணவாரீர்!
தேங்காயுருட்டுமாம் காணவாரீர்!
சீராரும் திருவேள்வி காணவாரீர்!

மாங்காய் பலாக்காய் வழுதுணங்காய்
மஞ்சளோடிஞ்சி சிறுகிழங்கு
தேங்காய் உருட்டுமாம் காணவாரீர்!
சீராரும் திருவேள்வி காணவாரீர்! 12

ஸ்ரீ நம்பி திருவடிகளே சரணம்.

பின்னர் "உபய குலத்தாருக்கும் சீர்பாடி தளிமம் படுப்போமே" என்று சீர்பாடல்.

முதல் திருநாள் பாசுரமும் பதினோராந்திருநாள் பாசுரமும் இரண்டு தடவைகள் அனுசந்திக்கவேண்டியவை.